**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 70/2022**

**Deposition of P.W.** 10

Name : திருமதி. உமா

S/o, D/o, W/o :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:11.03.2026

**Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது தென்காசி மாவட்டம் தென்காசி காவல்நிலைய குற்றபிரிவு காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் குலசேகரம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றிய போது நிலைய குற்ற எண். 409/2021 வழக்கை சார்பு ஆய்வாளர் திரு. வினிஷ் பாபு என்பவர் முதல் விசாரணை செய்து என்னிடம் ஒப்படைத்த வழக்கு கோப்பை 04.12.2021ம் தேதி எனது விசாரணைக்கு எடுத்து கொண்டு சாட்சிகள் அஸ்பின், அமல்ராஜ், செல்லன், கலா, சார்லெட் ஆகியவர்களை மீண்டும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவ இடத்தை பார்வையிட்டேன். சம்பவ இட சாட்சிகள் தாசன், ராஜையன் ஆகியவர்களை விசாரித்தேன். அவர்கள் சார்பு ஆய்வாளரிடம் கூறியது போலவே என்னிடமும் கூறியதால் தனியாக வாக்குமூலம் பதிவு

செய்யவில்லை. அன்றைய தினம் இவ்வழக்கின் எதிரி மதுரை உயர்நீதிமன்ற கிளையிலிருந்து முன் பிணை பெற்றிருந்தார். 30.12.2021ம் தேதி காயம்பட்ட நபருக்கு சிகிச்சை வழங்கிய ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவர் திரு. பொன் சங்கர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன், சிகிச்சை சான்று பெற்றேன். குலசேகரம் அரசு மருத்துவமனை மருத்துவர் டாக்டர் திரு. சினி பி சென்ஸ் என்பவரை விசாரித்து வாக்குமூலம்பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். அன்றைய தினமே இவ்வழக்கின் சட்ட பிரிவுகள் 294(பி), 323, 506(2), 307 இ.த.ச– விலிருந்து 294(பி), 323, 506(2), 307, 325 இ.த.ச ஆக மாற்றம் செய்து சட்டபிரிவு மாறுதல் அறிக்கை சமர்பித்தேன். அந்த சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8. பின்னர் எனது விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

குலசேகரம் அரசு மருத்துவமனை மருத்துவர் எனது விசாரணையில் காயம்பட்ட நபருடன் வேறு யாரும் வந்ததாக கூறவில்லை. காயம்பட்ட நபருக்கு முகம் மற்றும் கண்ணுக்கு கீழ் சிகிச்சை வழங்கியதாக என்னிடம் கூறவில்லை. 22.10.2021ம் தேதி காயம்பட்ட நபரிடமிருந்து புகாரோ, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதற்கான தகவலோ கிடைக்கப்பெறவில்லை என்று சொன்னால் சரிதான். 23.10.2021ம் தேதி காயம்பட்ட நபர் தான் காயவ்லநிலையத்தில் ஆஜராகி புகார் மனு கொடுத்துள்ளார். முதலில் புகாரை பெற்று மனு ரசீது எண்.471/2021 என எண்ணிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் தலையில் தாக்க வந்ததாகவோ, அந்த அடி வயிற்றில் பட்டதாகவோ கூறவில்லை என்றால்

சரிதான். 04.12.2021ம் தேதி நான் விசாரித்த சாட்சிகள் என்னிடம் கம்பு இரண்டு துண்டாக உடைந்ததாக கூறவில்லை, அடித்த கம்பை அப்படியே போட்டுவிட்டு சென்றதாக கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். 24.10.2021ம் தேதி அத்தாட்சி தயார் செய்யப்பட்டுள்ளது. அத்தாட்சியில் காற்றாடி கம்பு இரண்டு துண்டுகள் கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். படிவம் 95ல் இரண்டு பக்கமும் உடைந்த நிலையில் உள்ள என்று திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி திருத்தம் சார்பு ஆய்வாளரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. திருத்ததின் அருகே மேலொப்பம் எதுவும் இல்லை. நான் சொன்னதுபோல் காயம்பட்ட நபருக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. தவறான உள்நோக்கத்தோடு சட்டபிரிவை மாற்றம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவ இடம் சென்று எவ்வித சாட்சிகளையும் விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.